DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 95/2021

Prosecution witness for P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. முத்துப்பாண்டி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.11.2025.**

Accused present.

முதல்விசாரணை:-

நான் பிறந்தது முதல் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா உசரத்துகுடியிருப்பு பிரமணவிளை மேற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். கூலி வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன துரைராஜ் எனது உடன் பிறந்த அண்ணன். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எனது அண்ணனின் மகன் ஆவார். என் அண்ணனுக்கு 4 பிள்ளைகள், 2 பெண், 2 ஆண் ஆவார்கள். ஆண்களில் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். மற்றொருவர் ஜெகன் அவர் இறந்துபோய்விட்டார். எனது அண்ணன் துரைராஜ் எங்கள் தெருவை சேர்ந்த செல்வம் என்பவரை காதலித்து திருமணம் செய்து கொண்டார். அடிக்கடி அவர் குடிப்பதனால் அவருக்கும், அவரது மனைவி செல்வத்திற்கும் தகராறுவரும். அதை நாங்கள் தட்டிக்கேட்டால் எங்கள் பிரச்சனையில் தலையிடக்கூடாது என்று சத்தம் போட்டுவிடுவார். அதனால் நாங்கள் அவர்களிடம் பேசுவது கிடையாது. அடிக்கடி அவர் சண்டை போட்டுவிட்டு எனது அண்ணன் துரைராஜின் மனைவி அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிடுவார். என் அண்ணன் மனைவி செல்வத்தின் வீடு என் அண்ணன் வீட்டிலிருந்து 2 வீடுகள் தள்ளி உள்ளது. 07.07.2020 அன்று என் அண்ணன் துரைராஜ், என் அண்ணன் மனைவியையும், மகனையும், மகளையும் வெட்டிவிட்டார். அதனால் தட்டார்மடம் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்து அவனை பிடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். பின்னர் வெளியே வந்துவிட்டார்.

அதன்பிறகும் குடித்துவிட்டுவந்து என் அண்ணன், அவரது மனைவியுடன் அடிக்கடி சண்டை போட்டு வந்தார். 16.08.2020 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் பைப்பில் தண்ணீர் பிடித்துக்கொண்டிருக்கும்போது என் அண்ணன், அவரது மனைவியையும், மகன்களையும் திட்டி கொண்டிருந்தார். அதனால் என் அண்ணன் மனைவி செல்வம் சொல்லிக்கொடுத்து என் அண்ணன் மகன்கள் சிவாவும், ஜெகனும் கையில் கம்பை வைத்துக்கொண்டு இன்னும் உயிருடன் இருந்தால் எங்களை திட்டிக்கொண்டுதான் இருப்பாய், எங்களுக்கு நிம்மதி இருக்காது என்றும், நீ செத்தால்தான் எங்களுக்கு நிம்மதி என்று சொல்லி எதிரி சிவா என் அண்ணனின் தலையில் வேகமாக அடித்தான். அந்த அடி என் அண்ணனின் வலது கண்புருவத்திற்கு மேல்பட்டு இரத்தக்காயம் ஏற்பட்டது. அந்த அடியிலேயே என் அண்ணன் சுருண்டு கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்த என் அண்ணன் ஜெகன் அவனது கையிலிருந்த கம்பால் மாறி மாறி அடித்தார். கீழே விழுந்த என் அண்ணனை இருவரும் சேர்ந்து கை, கால்களை பிடித்து தரதரவென இழுத்து அவரது வீட்டிற்கு முன் போட்டுவிட்டார்கள். இந்த சம்பவத்தை நான் மற்றும் எனது மனைவி, அருகில் உள்ள வீட்டுக்காரர்கள் பார்த்துக்கொண்டிருந்தோம். நாங்கள் சென்று எதுவும் கேட்கவில்லை ஏனென்றால் கேட்டால் எங்கள் பிரச்சனை தலையிடாதீர்கள் என்று சொல்லி ஏசுவார்கள் என்று நாங்கள் அருகில் போகவில்லை. என் வீட்டின் முன்பு போட்ட இடத்திலிருந்து சத்தம் போட்டு திட்டிக்கொண்டிருந்தார். அவருக்கு குடிக்க தண்ணீர்கூட கொடுக்கவில்லை. அதன்பிறகு சுமார் 3.30 மணியளவில் என் அண்ணன் துரைராஜ் சத்தமில்லாமல் இருந்ததால் நாங்கள் சென்று அருகில் பார்த்தபோது என் அண்ணன் இறந்துகிடந்தான். பின்னர் தட்டார்மடம் காவல்நிலையம் சென்று நான் புகார்மனு கொடுத்தேன். அந்த புகார்மனுவை நான் சொல்ல சொல்ல என் ஊரை சேர்ந்த என்னுடன் வந்த நாகராஜ் மகன் கணேஷ் என்பவர் எழுதினார். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் சாட்சியாக கணேசன் என்பவர் கையெழுத்து செய்தார். அந்த புகார்மனு நீதிமன்றத்தில் காண்பிக்கப்படுவது அது **அ.சா.ஆ– 1** ஆகும். என் அண்ணன் சம்பவத்தின்போது அணிந்திருந்த கருப்பு, வெள்ளை, நீலம்கலந்த கட்டம்போட்ட சாரமும், இரத்தம்பட்ட மஞ்சள்கலர் அரைக்கை சட்டை போட்டிருந்தார் அவைகளில் இரத்தம்பட்டிருந்தது. என் அண்ணனை எதிரிகள்அடித்து காயப்படுத்திய கம்பை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். அவைகள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சுமார் 120 செ.மீ நீளமும், 11 செ.மீ சுற்றளவும் கொண்ட உடைமரகம்பு (சொத்துபட்டியல் வரிசை எண். 1ல் உள்ளது) அது

**அ.சா.பொ.1** ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சுமார் 125 செ.மீ நீளமும், 10 செ.மீ சுற்றளவும் கொண்ட உடைமரகம்பு (சொத்துபட்டியல் வரிசை எண். 2ல் உள்ளது) அது **அ.சா.பொ.2** ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் என் அண்ணன் சம்பவத்தின்போது அணிந்திருந்த இரத்தம்பட்ட நீலம், வெள்ளை கருப்பு கலர் கலந்த கட்டம்போட்ட சாரம் (சொத்துபட்டியல் வரிசை எண். 5ல் உள்ளது) அது **அ.சா.பொ.3** ஆகும். நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் என் அண்ணன் சம்பவத்தின்போது அணிந்திருந்த இரத்தம்பட்ட மஞ்சள் கலர் அரைக்கை சட்டை (சொத்துபட்டியல் வரிசை எண். 6ல் உள்ளது) அது **அ.சா.பொ. 4** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)</u>

நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கட்டிட வேலைக்கு செல்வேன். எத்தனை மணிக்கு வேலைக்கு போய்விட்டு எத்தனை மணிக்கு வீட்டிற்கு திரும்பி வருவேன் என்றால் காலை 9.00 மணிக்கு சென்றுவிட்டு மாலை 7.00 மணிக்கு வருவேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் காலகட்டம் கொரனா காலகட்டம் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கும் தட்டார்மடம் காவல்நிலையத்திற்கும் ஒரு கி.மீ என்றால் இல்லை 2,3 கி.மீ இருக்கும். அந்த துாரத்தை பைக்கில் சென்றால் 10 நிமிடத்தில் சென்றுவிடலாம் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கு அருகே ஜார்ஜ் ஐயா கெபி என்று உள்ளது அதில் போலீஸ்காரர்கள் எப்போதும் இருப்பார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடைப்பட்ட நேரத்தில் போலீசாருக்கு எந்த தகவலும் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை, சொல்லக்கூடாது என்று சொல்லிவிட்டதால் சொல்லவில்லை. அப்படி ஒரு சம்பவமும் நடைபெறாததால்தான் காவல்நிலையத்திற்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எனக்கு எழுத படிக்க தெரியாது என்றால் எழுத தெரியாது, படிக்க தெரியும். நான் காவல்நிலையத்திற்கு எத்தனை மணிக்கு போனேன் என்றால் 4 மணிக்கு போனேன். என்னை போலீசார் எங்கு வைத்து எப்போது விசாரித்தார்கள் என்றால் நான் புகார்கொடுத்தபிறகு 6.00 மணிக்கு விசாரணை செய்தார்கள். புகார்மனுவை தவிர வேறு எதிலும் போலீசார் கையெழுத்து வாங்கினார்களா என்றால் இல்லை. என்னுடன் பிறந்தவர்கள் எத்தனை பேர் என்றால் 8 பேர். என் தகப்பனார் எங்கள் 4 பேருக்கும் தனித்தனியாக சொத்துக்களை பிரித்து கொடுத்துவிட்டார்களா என்றால் 3 பேருக்குத்தான் பிரித்துக்கொடுத்தார்கள், ஒருவருக்கு இன்னும் பிரித்து கொடுக்கவில்லை. என்னைவிட என் அண்ணன் துரைராஜ்க்கு அதிகமாக பங்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று

குடும்பத்தில் பிரச்சனை செய்தேன் என்றால் இல்லை. அது சம்மந்தமாக என் அண்ணன் துரைராஜ்க்கு அதிகமாக மது வாங்கிகொடுத்து அவரை குடிக்க வைத்து அவரது மனைவி பிள்ளைகளிடம் சென்று சண்டை போட்டு பத்திரத்தை வாங்கி வா என்று பிரச்சனை செய்து வந்தேன் என்றால் அவர்களிடம் பேச்சுவார்த்தையே கிடையாது. அந்த வழக்கில் போலீசார் என்னையும் விசாரித்தார்கள் என்றும், நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் இல்லை. என் அண்ணனிடம் இருந்து சொத்தை பெறுவதற்கு இந்த எதிரிகள் தடையாக இருக்கிறார்கள் என்றால் சொத்து தகராறே இல்லை. எதிரி சிவா திருப்பூரில் கடையில்தான் வேலை பார்த்து வந்தார்ள ன்றால் வெளியூரில் வேலை பார்த்தார், எந்த ஊர் என்று குறிப்பிட்டு தெரியாது. அவருடைய வருமானத்தை வைத்துதான் அவர்கள் குடும்பம் வாழ்ந்து வருகிறது என்றால் சரியல்ல. அவர் ஊர் திருவிழாவிற்குத்தான் ஊருக்கு வருவார் என்றால்சரியல்ல. சம்பவ நடந்ததாக சொல்லக்கூடிய வீட்டிற்கு எதிரே திருமணவேல் என்பவர் வீட்டில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடம் ஆள் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரத்திலிருந்து காவல்நிலையத்திற்கு புகார் கொடுக்கும்வரை 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து மருத்துவ சிகிச்சைக்கு ஏற்பாடு செய்தேனா என்றால் இல்லை, அவர்கள் தலையிடக்கூடாது என்று சத்தம்போட்டதால் சொல்லவில்லை. என் அண்ணன், மற்றும் அவரது மனைவி, பிள்ளைகள் பிரிந்துதான் உள்ளார்கள் என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் அவ்வாறு ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றாலும், அதனால்தான் 108 ஆம்புலன்சிற்கு போன் செய்யவில்லை என்றுசொன்னால்சரியல்ல. என் அண்ணன் எலக்ட்ரிசியன் வேலை பார்க்கிறார் என்றால் சரிதான். அவ்வாறு பார்க்கும்போது அவருக்கு கீழே விழுந்து காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் அண்ணனுடைய சொத்தை அபகரிக்க நான் செய்கிற முயற்சிக்கு எதிரிகள் இடையூறாக இருக்கிறார்கள் என்றும், ஊரிலேயே இல்லாத எதிரியை அவர்கள்தான் என் அண்ணன் மீது காயத்தை ஏற்படுத்தினார்கள் என்று பொய்யாக சொல்லி புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் வேறு யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. விசாரணை செய்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எங்கு வைத்து விசாரித்தார்கள் என்றால் புகார்மனு கொடுத்தபிறகு 6.00 மணிக்கு மேல் விசாரித்தார்கள். உடைகளை பற்றி புகார்மனுவில் சொல்லவில்லை என்றால் அந்த நேரத்தில் அதை எழுதவில்லை. புகாரில் என்ன எழுதப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. தெரியும்.

அந்த புகார்மனு ஏற்கனவே காவல்நிலையத்தில் எழுதப்பட்டிருந்ததா அல்லது என்னிடம் கையெழுத்து பெற்று எழுதப்பட்டதா என்றால் நான் சொல்ல சொல்ல கணேசன் எழுதினான். புகார்மனுவை எழுதிய கணேசன் என்பவர் 17 வயதான மைனர் பையன் என்றால் தெரியாது. புகார்கொடுக்க செல்லும்போது என் மனைவி அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். புகார்கொடுக்க சென்ற விவரம் எனது மனைவிக்கு தெரியுமா என்றால் தெரியும். நானும், எனது மனைவியும் குடும்ப சொத்தை அபகரிக்க வேண்டும் என்பது காவல்நிலையத்திற்கு தெரிந்துவிடக்கூடாது என்று நினைத்து மைனர் பையனை அழைத்து சென்று குறுக்கு வழியை கையாண்டுள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரத்தில் எதிரி அவர் பாட்டி வீட்டில்தான் இருந்தார் என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் போலீசார் தடயங்களை கைப்பற்றவில்லை என்றால் இல்லை, போட்டோ எழுத்தார்கள். நான் சொன்னமாதிரி, சொன்ன தேதியில் சொன்ன சமயத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. உண்மையிலேயே சம்பவம் நடந்திருந்தால் என் அண்ணனை காப்பாற்ற 108 ஆம்புலன்சிற்கு போன் செய்து நடவடிக்கை எடுத்திருப்பேன் என்றும், எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் தற்போது பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. யார் என்னை நடவடிக்கை எடுக்காமல் தடுத்தது என்றால் செல்வம், சிவா, ஜெகன். புகார்மனுவில் செல்வம், சிவா, ஜெகன் புகார் கொடுக்காமல் என்னை தடுத்தார்கள் என்று கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் கிடையாது என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

II Additional District& Sessions Judge,
Thoothukudi.

# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF II ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No. 95/2021

Prosecution witness for P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | ... திருமதி. காந்திமதி | Caste | ... |
| Father's/ Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **24.11.2025.**

Accused present.

முதல்விசாரணை:-

நான் திருமணமான நாள் முதல் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் தாலுகா உசரத்துகுடியிருப்பு பிரமணவிளை மேற்கு தெருவில் குடியிருந்து வருகிறேன். என் கணவர் கூலி வேலை செய்து வருகிறார். இந்த வழக்கில் கொலையுண்டு இறந்துபோன துரைராஜ் எனது கணவரின் உடன் பிறந்த அண்ணன். ஆஜர் எதிரியை தெரியும். . என் கணவரின் அண்ணனுக்கு 4 பிள்ளைகள், 2 பெண், 2 ஆண் ஆவார்கள். ஆண்களில் ஒருவர் நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளார். மற்றொருவர் ஜெகன் அவர் இறந்துபோய்விட்டார். எனது கணவரின் அண்ணன் துரைராஜ் எங்கள் தெருவை சேர்ந்த செல்வம் என்பவரை 22 வருடங்களுக்கு முன்பு காதலித்து திருமணம் செய்து 4 பிள்ளைகளை பெற்றுக்கொண்டு நன்றாகத்தான் வாழ்ந்தார். பின்னர் துரைராஜ் அடிக்கடி அவர் குடிப்பதனால் அவருக்கும், அவரது மனைவி செல்வத்திற்கும் தகராறுவரும். அதை நாங்கள் தட்டிக்கேட்டால் எங்கள் பிரச்சனையில் தலையிடக்கூடாது என்று சத்தம் போட்டுவிடுவார். எங்கள் பிரச்சனை இன்று சண்டைபோடுவோம், நாளை சேர்ந்துகொள்வோம், இது சங்கள் குடும்ப பிரச்சனை என்று கூறுவதால் நாங்கள் அவர்களிடம் பேசுவது கிடையாது. அடிக்கடி அவர் சண்டை போட்டுவிட்டு எனது கணவரின் அண்ணன் துரைராஜின் மனைவி அவரது அம்மா வீட்டிற்கு சென்றுவிடுவார். என் கணவரின் அண்ணன் மனைவி செல்வத்தின் வீடு

என் கணவரின் அண்ணன் வீட்டிலிருந்து 2 வீடுகள் தள்ளி உள்ளது. எங்கள் வீடும் அதே தெருவில்தான் உள்ளது. 07.07.2020 அன்று என் கணவரின் அண்ணன் துரைராஜ், அவரது மனைவியையும், அவரது மகனையும், மகளையும் வெட்டிவிட்டார். அதனால் தட்டார்மடம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்து வழக்கு பதிவு செய்து துரைராஜை பிடித்துக்கொண்டு சென்றுவிட்டார்கள். பின்னர் வெளியே வந்துவிட்டார். அதன்பிறகும் குடித்துவிட்டுவந்து என் கணவரின் அண்ணன் இறந்துபோன துரைராஜ், அவரது மனைவியுடன் அடிக்கடி சண்டை போட்டு வந்தார். அவர் குடிக்கும் நேரங்களில் எல்லாம் சண்டை போட்டு வந்தார். 16.08.2020 அன்று காலை சுமார் 7.00 மணியளவில் எங்கள் தெரு பைப்பில் இறந்துபோன துரைராஜ் தண்ணீர் பிடித்துக்கொண்டிருக்கும்போது அவர் அவரது மனைவியையும், மகன்களையும் திட்டி கொண்டிருந்தார். தண்ணீர் பிடித்த பைப்பிலிருந்து செல்வம் அம்மா வீடு 3 வீடுகள் தள்ளி உள்ளது. அதனால் என் கணவரின் அண்ணன் மனைவி செல்வம் சொல்லிக்கொடுத்து என் கணவரின் அண்ணன் மகன்கள் சிவாவும், ஜெகனும் கையில் கம்பை வைத்துக்கொண்டு நீ இன்னும் உயிருடன் இருந்தால் எங்களை திட்டிக்கொண்டுதான் இருப்பாய், எங்களுக்கு நிம்மதி இருக்காது என்றும், நீ செத்தால்தான் எங்களுக்கு நிம்மதி என்று சொல்லி எதிரி சிவா என் கணவரின் அண்ணனின் தலையில் கம்பை கொண்டு வலதுபுறம் வேகமாக அடித்தான். அந்த அடி என் கணவரின் அண்ணனின் வலது கண்புருவத்திற்கு மேல்பட்டு கண்வீங்கி இரத்தக்காயம் ஏற்பட்டது. அந்த அடியிலேயே என் கணவரின் அண்ணன் சுருண்டு கீழே விழுந்துவிட்டார். கீழே விழுந்த என் கணவரின் அண்ணன் ஜெகன் அவனது கையிலிருந்த கம்பால் மாறி மாறி எனது கணவரின் அண்ணனை அடித்தார். உடனே என் கணவர் முத்துப்பாண்டி தட்டிக்கேட்டார். தட்டிக்கேட்ட என் கணவரை இந்த விசயத்தில் நீ தலையிடாத என் குடும்ப பிரச்சனை என்அம்மாவை வெட்டினார் அதனால் அடித்து கொல்லுகிறேன், இது உனக்கு இதில் சம்மந்தமில்லை என்று சொன்னதால் என் கணவர் பயத்தில் இருவரும் கம்பு வைத்திருந்ததால் சிறிது தள்ளி வந்து நின்றுவிட்டார். கீழே விழுந்த என் கணவரின் அண்ணனை இருவரும் சேர்ந்து கை, கால்களை பிடித்து தரதரவென இழுத்து அவரது வீட்டிற்கு முன் போட்டுவிட்டார்கள். இந்த சம்பவத்தை நான் மற்றும் எனது கணவர், அருகில் உள்ள வீட்டுக்காரர்கள் அன்னத்தாய், கணேஷ், சந்திரா, ராஜகிளி ஆகியோர்கள் பார்த்துக்கொண்டிருந்தோம். நாங்கள் சென்று எதுவும் கேட்கவில்லை ஏனென்றால் கேட்டால் எங்கள் பிரச்சனை தலையிடாதீர்கள் என்று சொல்லி ஏசுவார்கள் என்று நாங்கள் அருகில்

போகவில்லை. என் கணவரின் அண்ணன் வீட்டின் முன்பு போட்ட இடத்திலிருந்து சத்தம் போட்டு திட்டிக்கொண்டிருந்தார். என்னை காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள் இந்த வீடு சிவாவுக்குத்தான் சிவா என்னை எப்படியாவது காப்பாத்துய்யாஎன்று கூறி கும்பிட்டார், அந்த சிவா ஆஜர் எதிரிதான். ஆனால் அவருக்கு குடிக்க தண்ணீர்கூட கொடுக்கவில்லை. அதன்பிறகு அடிக்கடி இவ்வாறு வழக்கம்போல் சண்டை நடப்பதால் இது வழக்கம்போல் நடப்பதுதானே என்றுசொல்லி நாங்கள் வீட்டிற்கு சென்றுவிட்டோம். அதன்பிறகு சுமார் 3.30 மணியளவில் என் கணவர் என் கணவரின் அண்ணன் துரைராஜ் சத்தமில்லாமல் இருந்ததால் என் கணவர் அருகே சென்று பார்த்தபோது அவர் மூச்சி பேச்சி இல்லாமல் இறந்துகிடந்தார். பின்னர் சுமார் 4.00 மணியளவில் தட்டார்மடம் காவல்நிலையம் சென்று என் கணவர் புகார்மனு கொடுக்கப்போவதாக சொல்லி சென்றார். என் கணவரின் அண்ணன் சம்பவத்தின்போது அணிந்திருந்த கருப்பு, வெள்ளை, நீலம்கலந்த கட்டம்போட்ட சாரமும், இரத்தம்பட்ட மஞ்சள்கலர் அரைக்கை சட்டை போட்டிருந்தார் அவைகளில் இரத்தம்பட்டிருந்தது. என் கணவரின் அண்ணனை எதிரிகள் அடித்து காயப்படுத்திய கம்பை நீதிமன்றத்தில் காண்பித்தால் அடையாளம் காட்ட முடியும். அவைகள் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சுமார் 120 செ.மீ நீளமும், 11 செ.மீ சுற்றளவும் கொண்ட உடைமரகம்பு (சொத்துபட்டியல் வரிசை எண். 1ல் உள்ளது) அது **அ.சா.பொ.1 தான்.** நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் சுமார் 125 செ.மீ நீளமும், 10 செ.மீ சுற்றளவும் கொண்ட உடைமரகம்பு (சொத்துபட்டியல் வரிசை எண். 2ல் உள்ளது) அது **அ.சா.பொ.2 தான்.** நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் என் கணவரின் அண்ணன் சம்பவத்தின்போது அணிந்திருந்த இரத்தம்பட்ட நீலம், வெள்ளை கருப்பு கலர் கலந்த கட்டம்போட்ட சாரம் (சொத்துபட்டியல் வரிசை எண். 5ல் உள்ளது) அது **அ.சா.பொ.3 தான்.** நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் என் கணவரின் அண்ணன் சம்பவத்தின்போது அணிந்திருந்த இரத்தம்பட்ட மஞ்சள் கலர் அரைக்கை சட்டை (சொத்துபட்டியல் வரிசை எண். 6ல் உள்ளது) அது **அ.சா.பொ. 4 தான்.** இது சம்மந்தமாக தட்டார்மடம் காவல்நிலைய ஆய்வாளர் என்னை மாலை சுமார் 6.00 மணியளவில் விசாரித்தார்கள்.

<u>குறுக்குவிசாரணை (எதிரிதரப்பில்)</u>

நான் தற்போது சொல்லியுள்ள விவரங்களைத்தான் போலீசார்விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். துரைராஜ்க்கு திருமணம் முடிந்தபின்பு எத்தனை வருடங்கள் கழித்து

எனக்கு திருமணம் நடந்தது என்றால் 7 வருடங்கள். துரைராஜும் செல்வமும் காதலித்து திருமணம் செய்தார்கள் என்று எப்படி தெரியும் என்றால் எனது கணவரும், அவரது அம்மாவும் சொன்னார்கள். நான் என்ன படித்துள்ளேன் என்றால் 5 ஆம் வகுப்பு படித்துள்ளேன். எனக்கு எழுதபடிக்க தெரியும் என்றால் சரிதான். எனது கணவர் புகார் கொடுக்க செல்லும்போது என்னை உடன் அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். 07.07.2020 அன்று நடந்த சம்பவத்திற்கு என் கணவரிடம் போலீசார் விசாரித்தார்கள் என்றால் இல்லை, விசாரிக்கவில்லை. 07.07.2020 அன்று நடந்த சம்பவத்தை பற்றி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் பக்கத்தில் சொன்னதை வைத்து தெரியும். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடம் மக்கள் நடமாட்டம் உள்ள இடம் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கு அருகேயுள்ள ஜார்ஜ் கெபியில் போலீசார் எப்போதும் இருப்பார்கள் என்றால் நான் பார்த்ததேயில்லை. சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய காலம் கொரனா லாக்டவுன் என்றால் சரிதான். அவ்வாறு இருப்பதால் போலீசார் ஒரு மணிநேரத்திற்கு ஒருமுறை வந்து பார்த்து செல்வார்கள் என்றால் சரிதான். எனது மாமனார் இடங்களை பங்கு வைத்துகொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது. எங்களைவிட துரைராஜ்க்கு கூடுதலாக இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்று எனது கணவர் எப்போதும் ஒரு வாதத்தை வைத்திருந்தார் என்றால் இல்லை. எங்களைவிட துரைராஜ்க்கு கூடுதலாக இடம் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் அதனை வாங்கவேண்டும் என்ற எண்ணம் எனது கணவருக்கு இருந்தது என்றால் சரியல்ல. துரைராஜ் எப்போதும் போதையில்தான் இருப்பார் என்றால் நிதானத்தில்தான் இருப்பார். ரேடியோ கட்டுவதற்கு, கோவிலில் சீரியல் போடுவது போன்ற வேலைகளை செய்வார் என்றால் எலட்க்ரிக் வேலை செய்வார். எனக்கு செல்போன் பயன்படுத்த தெரியும் என்றால் அப்போது எனக்கு செல்போன் கிடையாது. எனது கணவரின் செல்போனை பயன்படுத்த தெரியுமா என்றால் தெரியும். சம்பவத்தை பற்றி 108 ஆம்புலன்சிற்கு எதுவும் சொன்னேனா என்றால் அடிக்கடி சண்டை போடுவார்கள். சொன்னமாதிரி, சொன்ன விதத்தில் அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை என்றால் சரியல்ல. செல்வம் அவரது கணவரை விட்டு பிரிந்து 15 ஆண்டுகளாக அவரது தாயார் வீட்டில்தான் இருக்கிறார் என்றால் இல்லை. வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி சிவா, ஜெகன் ஆகியோர்கள் வெளியூரில்தான் கடையில்தான் வேலை செய்கிறார்கள் என்றால் சரிதான், ஆனால் சம்பவ சமயம் கொரனா ஊரடங்கு இருந்ததால் வீட்டில்தான் இருந்தார்கள். சம்பவ சமயம் கொரனா ஊரடங்கு இருந்ததால் வீட்டில்தான் இருந்தார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மற்றவர்கள் சம்பவத்தை

பார்த்தார்கள் என்று சொல்லியுள்ளநிலையில் அவர்கள் யாரும் மருத்துவமனைக்கோ, காவல்துறைக்கோ புகார் கொடுக்க முன்வரவில்லை என்றால் அவர்களும் துரைராஜ் சாகட்டும் என்ற மனநிலையில் இருந்தார்கள். எனது வீடும் துரைராஜ் வீடும் எவ்வளவு தூரம் என்றால் பக்கத்து வீடு பக்கத்து வீடு. எங்கள் ஊரில் முத்துமாலையம்மன் கோவிலில் தை மாதம் கோவில்கொடை நடக்கும் என்றால் ஆமாம். தை மாதம் நடக்கும் கோவில் கொடைக்குத்தான் எதிரிகள் ஊருக்கு வருவார்கள் என்றும், மற்ற நேரங்களில் ஊருக்கு வரமாட்டார்கள் என்றால் சரியல்ல, அவர்கள் ஊரில்தான் இருந்தார்கள். அவர்கள் ஊரில்தான் இருந்தார்கள் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னை புகார்மனு கொடுக்க என் கணவர் அழைத்தாரா என்றால் பிள்ளைகள் வீட்டில் இருந்ததால் நான் செல்லவில்லை. மேற்கூறியவாறு எனது கணவர் எனது மனைவியை புகார் கொடுக்க அழைத்தேன் அவர் வரவில்லை என்று புகார் மனுவிலோ, போலீசார் என்னை விசாரிக்கும்போதோ சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எங்கள் வீட்டிற்கு அருகே திருமணவேல் என்பவர் வீட்டில் கண்காணிப்பு கேமரா உள்ளது என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரத்தில் எதிரி ஊரில் கிடையாது என்றும், துரைராஜ் எலக்ட்ரிக் வேலை செய்யும்போது கீழே மதுபோதையில் விழுந்து ஏற்பட்ட காயத்திற்கு அவரின் சொத்தை அபகரிப்பதற்காக நானும், எனது கணவரும் சேர்ந்து திட்டமிட்டு ஆலோசனை செய்து புகார் கொடுத்துவிட்டோம் என்றால் சரியல்ல. சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அவ்வாறு நடந்திருந்தால் நானோ, கணவரோ, ஊர்க்காரர்களோ, ரோந்து வந்த போலீசாரோ காவல்துறைக்கோ, மருத்துவமனைக்கோ தகவல் தெரிவித்திருப்போம் என்றால் சரியல்ல. என்னை போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, விசாரித்தார்கள். அவ்வாறு விசாரிக்கும்போது யார் எல்லாம் இருந்தார்கள் என்றால் என் கணவரும் இருந்தார், அவரிடமும் விசாரித்தார்கள். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திலிருந்து எந்த தடயத்தையும கைப்பற்றவில்லை என்றால் அடிக்க பயன்படுத்திய கம்பை கைப்பற்றினார்கள். அது சம்மந்தமாக யாரிடமாவது விசாரித்தார்களா என்றால் நினைவில்லை. நான் சொன்ன மாதிரி, சொன்ன இடத்தில் வைத்து எந்த கம்பையும் கைப்பற்றவில்லை என்றால் சரியல்ல. என் முன்பு கம்பை கைப்பற்றினார்கள் என்றும், என் மச்சான் அணிந்திருந்த துணிமணிகளை பற்றியோ போலீசார்விசாரணையில் சொல்லவில்லை என்றால் நினைவில்லை. நான் முன்னுக்குப்பின் முரணாக சாட்சியமளிக்கிறேன் என்றாலும், என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல

என்றாலும் சரியல்ல. சம்பவத்தை பற்றி என் கணவருடன் பிறந்த சகோதரர்களிடம் விசாரித்தார்களா என்றால் என் கணவரின் அண்ணன் வேல்முத்துவிடம் விசாரித்தார்கள். எவ்வாறு விசாரித்தார்கள் என்றால் நினைவில்லை. சம்பவ விசயமாக மோப்பநாய்கள் கொண்டு வந்து விசாரித்தார்களா என்றால் நாங்கள் எல்லாம் நேரில் பார்த்த சாட்சிகள் இருந்த நிலையில் மோப்ப நாய் கொண்டு வர தேவையில்லை. நாங்கள் யாரும் சம்பவத்தை பார்க்கவில்லை என்றால் சரியல்ல. காலை 7.00 மணிக்கு நடந்த சம்பவத்திற்கு மாலை 4.00 மணிக்கு புகார் கொடுக்க சென்றதாக சொல்வதை ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. சம்பவத்தை பற்றி புகார்கொடுத்தால் உனது மண்டை உடையும் என்றும், எனது கணவருக்கும் ஆபத்து என்றும் புகார் மனுவில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எங்கோ காயம்பட்டு இறந்தநபரை நானும், எனது கணவரும் சொத்தை அபகரிப்பதற்காக எதிரி மீது இந்த வழக்கில் பொய்யாக புகார் கொடுத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை இல்லை.</u>